# ஆண்டின் பொதுக்காலம் 16-ஆம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-07-18

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம்:* 23: 1-6,

*பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை:,*

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்:* 2: 13-18,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்:* 6: 30-34)

## திருப்பலி முன்னுரை

*இறைவனுக்குரியவர்களே,*

*ஆண்டின் பொதுக்காலம்* 16-*ஆம் ஞாயிறு திருப்பலி கொண்டாடங்களில் பங்கேற்க வந்துள்ளோம். இறைவனின் மந்தையாகிய மக்கள் முறையான வழிநடத்துதல் இன்றி சிதறிப்போகும்போது, ஆண்டவர் நமக்காக புதிய ஆயர்களை வழிகாட்டிகளாக அனுப்புகிறார் என்பதை இன்றைய திருவழிபாடு நமக்கு நினைவூட்டுகிறது. இறைவனின் பராமரிப்பை வழங்கும் திருச்சபையின் திருப்பணியாளர்களைப் பற்றி சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். இறைவனால் நம்மிடம் அனுப்பப்பட்ட மேய்ப்பர்களாகிய அவர்களை ஏற்று வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

www.tamilcatholicnews.com

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***பணியாற்ற அழைப்பவராம் இறைவா,***

*திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமக்கு ஏற்ற நல் மேய்ப்பர்களாக பணியாற்றவும், இறைமக்கள் அனைவரையும் கூட்டிச் சேர்த்து, உமது அரவணைப்பின் கீழ் கொண்டு வரவும் துணைசெய்ய வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***எங்கள் தலைவராம் இறைவா,***

*உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் உமக்கு உகந்த தலைவர்களால் வழிநடத்தப்படவும், அன்பு, அமைதி, ஒற்றுமை போன்ற இறையரசின் மதிப்பீடுகளை இம்மண்ணில் நிலைநாட்டவும் உதவிபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***கரிசனை அன்பு கொண்ட எம் இறைவா!***

*உமது பிள்ளைகள் எழுந்து ஒளிவீசிடத் தடையாக உள்ள தொற்றுநோய் உலகமெங்கும் நிறைந்து, சிறுகுழந்தைகள் தொடங்கிச் சமுதாயத்தின் அனைத்து மக்களை ஆட்டிப்படைக்கும் வேளையில் தங்கள் வாழ்க்கையில் நிலைத் தடுமாறும் நிலை உள்ள இன்றைய இளைய சமுதாயம் காப்பாற்றப்படவும், அவர்கள் உமது நேரிய இறையரசு பாதையில் பயணித்திடவும், அனைவரும் நோயிலிருந்து காக்கப்படவும் இறைவா உமை மன்றாடுகின்றோம்.*

***கருணைக் கடலே இறைவா!***

*நிராகரிப்பு, புறக்கணிப்பு, நோயின் தாக்கம் போன்ற காரணங்களால் இச்சமுகத்திலிருந்து விலகி வாழும் ஏழை எளியோர்கள், கைவிடப்பட்ட பெற்றோர்கள், அனாதைகள் மீண்டும் அன்பின் உறவில் இணைந்திடவும், புது வாழ்வுப் பெறவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***காலங்களைக் கடந்த எம் இறைவா!***

*எம் நாட்டில் உள்ள இளையோர் தங்கள் இளமைக் காலங்களில் உம் தூய ஆவியின் துணையை நாடி ஞானத்தைப் பெற்றுத் தங்கள் சொல்லாலும், செயலாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாகத் திகழத் தேவையான அருள் வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***ஆயர்களை அனுப்புபவராம் இறைவா,***

*உண்மையின் வழியில் மக்களை வழிநடத்தும் நல்ல ஆயர்களை எங்கள் நாட்டுக்கு அனுப்பி, வாழும் உண்மை கடவுளாகிய உம்மை அறிந்துகொள்ள மக்களுக்கு உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***நிலை வாழ்வு அளித்திடும் எம் இறைவா!***

*உம் குடும்பங்களில் கிறிஸ்துவில் மரித்த விசுவாசிகள் மற்றும் தொற்றுநோயால் மரித்த அனைவரும் நித்திய இளைப்பாற்றி அடையவும், உம் புனிதர்களில் திருக்கூட்டத்தில் அவர்களை இணைத்திடவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

www.tamilcatholicnews.com